# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| | | **அரியலூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் நிகழும் துர்முகி வருடம் 03.01.2020 தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அதுதொடர்பாக கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.** | |
| 03.01.20 | 209 | **பொருள் எண். 01**<br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பாதாள சாக்கடைத்திட்டத்தினால் சேதமடைந்த சாலைகளை சரிசெய்திட கீழ்கண்டவாறு திட்டமதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு திட்டப்பிரேரணை சமர்ப்பிக்கவும், இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் மேற்காணும் சாலை பணிகளை ஏதேனும் திட்டத்தின் கீழ் முழுமன்யமாக வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| Sl. No. | W. No. | Name of Work | Type of Road (CC/IPB)) | Estimate Cost In lakhs |
|---|---|---|---|---|
| 1 | 2 | PROVIDING & RESTORATION OF CC ROAD WITH RCC CULVERT ETHIRAJNAGAR WARD NO. 02 IN ARIYALUR MUNICIPALITY. | CC | 9.90 |
| 2 | 4 & 8 | PROVIDING AND LAYING OF RUBBERISED INTERLOCKING PAVER BLOCK IN KAMARAJAR NAGAR 4TH CROSS STREET AND KRISHNAN KOVIL STREET LANE WARD NO 04 & 08 AT ARIYALUR MUNICIPALITY. | IPB | 9.95 |
| 3 | 18 | PROVIDING AND LAYING OF RUBBERISED INTERLOCKING PAVER BLOCK IN JAYAMKONDAM ROAD OFFICE BUILDING, | IPB | 9.90 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | WARD NO 18 AT ARIYALUR MUNICIPALITY. | | | | |
| | | | 4 | 5, 6 & 14 | PROVIDING & RESTORATION OF CC ROAD WITH RCC CULVERT POOKKARA STREET ,POUND STREET,CITY BABU STREET AND MANIYANKUTTAI STREET AT WARD NO . 06, 14 & 05 IN ARIYALUR MUNICIPALITY. | CC | 9.00 | | |
| | | | 5 | 17 | PROVIDING & RESTORATION OF CC ROAD KOSINAGAR WARD NO. 17 IN ARIYALUR MUNICIPALITY. | CC | 9.96 | | |
| | | | 6 | 04, 05 & 17 | PROVIDING & RESTORATION OF CC ROAD WITH RCC CULVERT KAMARAJAR NAGAR 5TH CROSS, RAJAJI NAGAR,RAJAJI NAGAR 5 TH CROSS AND ENNAIKARA STREET AT WARD NO . 04, 05 & 17 IN ARIYALUR MUNICIPALITY. | CC | 9.10 | | |
| | | | 7 | 01, 03 & 12 | PROVIDING & RESTORATION OF CC ROAD ETHIRAJNAGAR CROSS STREET,RAILWAY STATION ROAD & NADU AGRAHARAM AT WARD NO . 01, 03 & 12 IN ARIYALUR MUNICIPALITY. | CC | 9.30 | | |
| | | | 8 | 01, 06 & 12 | PROVIDING & RESTORATION OF CC ROAD WITH RCC CULVERT AMBETHKAR STREET,KEERAIKARA STREET AND MELA AGRAHARAM AT WARD NO . 01, 06 & 12 IN ARIYALUR MUNICIPALITY. | CC | 9.80 | | |
| | | | 9 | 17 &18 | PROVIDING & RESTORATION OF CC ROAD KOSI NAGAR AND PERIYA STREET AT WARD NO.17 & 18 IN ARIYALUR MUNICIPALITY. | CC | 9.90 | | |
| | | | 10 | 1 to 18 | PROVIDING & RESTORATION OF DAMAGED CC ROADS IN WARDS. 01 TO 18 AT ARIYALUR MUNICIPALITY. | CC | 5.97 | | |

| | | | |
|---|---|---|---|
| | | Total    92.78<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| **03.01.20** | **210** | **<u>பொருள் எண். 02</u>**<br><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 பெரிய தெருவில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ளதால், மழைகாலத்தில் மழைநீர் தேக்கம் அடைந்து நிற்கிறது. ஆதலால் பொது மக்கள் நலன் கருதி புதியதாக சிறுபாலத்துடன் கூடிய மழை நீர் வடிகால் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.35 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மேற்காணும் பணியினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்பட்டது** |
| **03.01.20** | **211** | **<u>பொருள் எண். 03</u>**<br><br>அரியலூர் நகராட்சியின் மூலம் மாவட்ட விளையாட்டு அரங்கில் 26.01.2020 அன்று கொண்டாடப்படவுள்ள குடியரசு தினவிழா கொண்டாட்ட நிகழ்ச்சிக்கான முன்னேற்பாட்டு பணிகளான மரக்கன்று நடுதல், பூந்தொட்டி வைத்தல், சிவப்பு கம்பளம் விரிப்பு, மைக்செட், தளவாட சாமான்கள், சாமியானா, குடிநீர் விநியோகம், கழிவறை வசதி, வரவேற்பு பேனர், விழாப்பேனர் வைத்தல் மற்றும் சமாதான புறா பறக்க விடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்பட்டது** |
| **03.01.20** | **212** | **<u>பொருள் எண். 04</u>**<br><br>அரியலூர் நகராட்சியில் அரசுப்பொது மருத்துவமனை வளாகத்தில் NULM திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் உட்புற நோயாளிகளின் உடனிருப்போர் தங்கும் விடுதிக்கு முன்புறம் PAVER BLOCK மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>மேற்காணும் பணியினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| **03.01.20** | **213** | **<u>பொருள் எண். 05</u>**<br><br>அரியலூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும், கணினிக்கு தேவையான உதிரி பாகங்கள் மற்றும் பிரிண்டருக்கு தேவையான டோனர்கள் கொள்முதல் செய்ய 20.12.2019 அன்று பெறப்பட்ட உள்ளூர் விலைப்பள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். | **அனுமதிக்கப்பட்டது** |

| S. No | Particulars | Geevee System, Ariyalur(Each Rate) | Network System, Ariyalur (Each Rate) | Frontline Systems, Manappari(Each Rate) |
|---|---|---|---|---|
| 1. | HP 88A toner | Rs.3900/- | Rs.4100/- | Rs.4000/- |
| 2. | HP 78A toner | Rs.4000/- | Rs.4100/- | Rs.4100/- |
| 3. | Samsung 1043 toner | Rs. 3800/- | Rs.4100/- | Rs.4000/- |
| 4. | Service Charge | Rs.500/- | Rs.700/- | Rs.600/- |
| 5. | HP Desktop SMPS | Rs.4800/- | Rs.5100/- | Rs.5000/- |
| 6. | 32GB Sandisk Pendrive | Rs.600/- | Rs.650/- | Rs.650/- |
| 7. | 16GB Sandisk Pendrive | Rs.500/- | Rs.600/- | Rs.550/- |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Geevee System, Ariyalur என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம்

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிக்கலாம். | |
| 03.01.20 | 214 | **<u>பொருள் எண். 06</u>**<br><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி, குடிநீர் வரி, பாதாள சாக்கடை வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை தொகை மற்றும் நடப்பு தொகையினை செலுத்துதற்கும், போலியே செட்டு மருந்து முகாம் **19.01.2020** அன்று நடைபெறுவதை பொது மக்கள் அறியும் வண்ணம் ஒலிபெருக்கி மூலம் ஆட்டோவில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**50,000/–**த்திறகு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>மேற்காணும் பணியினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்பட்டது** |
| 03.01.20 | 215 | **<u>பொருள் எண். 07</u>**<br><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி, குடிநீர் வரி, பாதாள சாக்கடை வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை தொகை மற்றும் நடப்பு தொகையினை செலுத்துதற்கும், போலியே செட்டு மருந்து முகாம் **19.01.2020** அன்று நடைபெறுவதை பொது மக்கள் அறியும் வண்ணம் ஒலிபெருக்கி மூலம் ஆட்டோவில் விளம்பரம் செய்வதற்கு **03.01.2020** அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். | **அனுமதிக்கப்பட்டது** |

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | சரவணா சவுண்ட் சர்வீஸ், அரியலூர் | வெங்கடேஷ்வரா சவுண்ட் சர்வீஸ், அரியலூர் | குணா சவுண்ட் சர்வீஸ், அரியலூர் |
|---|---|---|---|---|
| 1. | அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி, குடிநீர் வரி, பாதாள சாக்கடை வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை தொகை மற்றும் நடப்பு தொகையினை செலுத்துதற்கும், போலியே செட்டு மருந்து | நாள் ஒன்றுக்கு ரூ.**3500/–** | நாள் ஒன்றுக்கு ரூ. **3250/–** | நாள் ஒன்றுக்கு ரூ. **3400/–** |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>முகாம் 19.01.2020 அன்று நடைபெறுவதை பொது மக்கள் அறியும் வண்ணம் ஒலிபெருக்கி மூலம் ஆட்டோவில் விளம்பரம் செய்யும் பணிகள் மேற்கொள்ளுதல்</td><td></td><td></td><td></td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br><br>
குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள வெங்கடேஷ்வரா சவுண்ட் சர்வீஸ், அரியலூர் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு.ஆ.வெங்கடேசன் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>03.01.20</td>
<td>216</td>
<td>
<u>பொருள் எண். 08</u><br><br>
துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், அரியலூர் அவர்கள் அலுவலக கடித ந.க.எண்.4917/அ1/2018, நாள்.18.12.2019ன்படி அரியலூர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதால் அதனை அரியலூர் நகர தென்பகுதி மக்களின் கோரிக்கையின்படி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.10 வ.உ.சி தெருவில் உள்ள சமுதாயக்கூடத்திற்கு மாற்றம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக்குறிப்பு<br><br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>03.01.20</td>
<td>217</td>
<td>
<u>பொருள் எண். 09</u><br><br>
அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான செட்டி ஏரி பூங்காவின் மின்விளக்குகள் மற்றும் மின்கம்பங்கள் பழுதடைந்து பயன்படுத்தாத நிலையில் உள்ளது. மேலும், UG கேபிள் உயர்மின் அழுத்தம் காரணமாக பழுதடைந்துள்ளதால், இரவு நேரங்களில் பூங்காவில் நடைபயிற்சி செய்பவர்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, செட்டி ஏரி பூங்காவில் புதியதாக மின்விளக்குகள் அமைக்கவும், UG கேபிள்கள் புதிதாக பதிக்கவும்
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் பழுதடைந்த மின்கம்பங்களை பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5.50 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம். | |
| **03.01.20** | **218** | **<u>பொருள் எண். 10</u>**<br><br>அரியலூர் நகராட்சி வார்டு எண்.05ல் உள்ள இரயில்வே நிலைய சாலை மற்றும் ராஜாஜி நகரில் உள்ள சிறுபாலம் உடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன்ருதி புதிய சிறுபாலம் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.68,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>1. மேற்காணும் தொகையினை பொதுநிதியில் வழங்கலாம்<br>2. மன்றம் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்பட்டது** |
| **03.01.20** | **219** | **<u>பொருள் எண். 11</u>**<br><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து, குடிநீர் விநியோகம் பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் பகிர்மான குழாய்களின் மூலம் விநியோகம் செய்யும் போது அடிக்கடை உடைப்பு ஏற்படுவதால் பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்கிட உடனடியாக உடைப்புகளை சரி செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 03.01.20 | 220 | **பொருள் எண். 12**<br><br>அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் கீழ்கண்ட நீரேற்று நிலையம், மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகள் மற்றும் PUMP ROOM ஆகியவற்றில் Spot குளோரின் இயந்திரம் நிறுவப்பட்டு தினசரி குளோரின் திரவம் கலந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.<br>1. திருமானூர் தலைமை நீரேற்று நிலையம் 2 Pumps<br>2. கல்லூரி வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி 2 Pumps<br>3. நகராட்சி அலுவலகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி 2 Pumps<br>4. குரும்பன்சாவடி PUMP ROOM 2 Pumps<br>மேற்கண்ட Spot குளோரின் இயந்திரம் அவ்வப்போது பழுது ஏற்படும் நிலையில் உடன் சரி செய்ய 2019–2020ம் ஆண்டுக்கு பராமரிப்பு (AMC) பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 03.01.20 | 221 | **பொருள் எண். 13**<br><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பாடும் காலங்களில் பொது மக்களுக்கு நீர் விநியோகம் செய்திட ஏதுவாக அரியலூர் நகராட்சி அலுவலகத்தின் முகப்பு பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மின்விசைப்பம்பு அமைத்திட உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 03.01.20 | 222 | **பொருள் எண். 14**<br><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 18 வார்டுகளிலும் உள்ள மினிபவர் பம்புகள் பழுது ஏற்பட்டு அதிலுள்ள சில மோட்டார்கள் காயில்கட்டி பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் உள்ளன. வரும் கோடைக்காலத்தினை கருத்தில் கொண்டும் பொது மக்களின் குடிநீர்த்தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டும் பயன்படுத்த இயலாத மோட்டார்களை பழுது நீக்கம் செய்திடவும் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மறுபயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலுள்ள மோட்டார்களை காயில்கட்டி சரி செய்திடவும் அவசியமாகிறது. எனவே, இப்பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம். | |
| **03.01.20** | **223** | **<u>பொருள் எண். 15</u>**<br><br>அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான கீழப்பழுவூரில் உள்ள உரக்கிடங்கில் குப்பைகள் சேர்ந்து குப்பைமேடாக காட்சியளிக்கிறது. அங்கு அமைந்துள்ள STP இடத்திற்குச் செல்ல இயலாத நிலை உள்ளது. எனவே, உரக்கிடங்கில் உள்ள குப்பை மேடுகளை சரி செய்து STP இடத்திற்கு செல்வதற்கு துஊகூ மற்றும் பொக்லைன் இயந்திரங்களைக் கொண்டு குப்பைகளை அகற்றிட ஆகும் மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்பட்டது** |
| **03.01.20** | **224** | **<u>பொருள் எண். 16</u>**<br><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பாடும் காலங்களில் பொது மக்களுக்கு நீர் விநியோகம் செய்திட ஏதுவாக பேருந்து நிலையத்தில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மின்விசைப்பம்பு அமைத்திட உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 03.01.20 | 225 | <u>பொருள் எண். 17</u><br><br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான ஐயப்பன் ஏரியின் கரைகள் மிகவும் பலமிழந்து வலுவற்ற நிலையில் உள்ளது. மேலும், ஏரியினைச் சுற்றி முப்புதர்கள், செடிக்கொடிகள் படர்ந்துள்ளது. எனவே, பொதுமக்கள் நலனை கருத்தில் கெண்டு ஏரியைச் சுற்றியுள்ள புதக்ள் மற்றும் செடிகளை அகற்றிடவும், கரையினை பலப்படுத்தவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு</u><br><br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

(ஓம்)திரு.என்.குமரன்,
தனி அலுவலர்,
அரியலூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையர்,
அரியலூர் நகராட்சி.